கூட்டம் எண்.8 செங்கல்பட்டு நகராட்சி

நாள். 27 .11 .2023

**<u>இரங்கல் கூட்டம்</u>**

**<u>2023–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் தேதி (30.11.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.20 மணிக்கு செங்கல்பட்டு நகராட்சி வேதாசலம் கட்டிடத்தில் இரங்கல் கூட்டம் நகரமன்ற தலைவர் திருமதி.தேன்மொழி நரேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுசமயம் துணைதலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.</u>**

**நகர்மன்ற தலைவர் திருமதி.தேன்மொழி நரேந்திரன் அவர்களால் கொண்டு வரப்பட்ட இரங்கல் கூட்டப்பொருள்**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட 23வது வார்டில் நகரமன்ற உறுப்பினராக இருந்து அப்பகுதி மக்களுக்கு அறிய பல சேவைகள் செய்து அப்பகுதி மக்களிடம் நற்பெயரை பெற்ற முன்னாள் நகரமன்ற உறுப்பினர் திரு.G.தியாகராஜன் அவர்கள் 23.09.2023ம் தேதி அன்று இயற்கை எய்தினார். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய வேண்டி இந்நகரமன்றத்தின் மூலம் இரங்கல் தீர்மானம் இயற்றவும் இத்தீர்மான நகலினை அன்னாரின் குடும்பதாரருக்கு அனுப்பி வைப்பது குறித்து.

நகரமன்ற தலைவர்
செங்கல்பட்டு நகராட்சி

**தீர்மான எண்.228 நாள்.30.11.2023**

செங்கல்பட்டு நகராட்சிக்கு உட்பட்ட 23வது வார்டில் நகரமன்ற உறுப்பினராக இருந்து அப்பகுதி மக்களுக்கு அறிய பல சேவைகள் செய்து அப்பகுதி மக்களிடம் நற்பெயரை பெற்ற முன்னாள் நகரமன்ற உறுப்பினர் திரு.G.தியாகராஜன் அவர்கள் 23.09.2023ம் தேதி அன்று இயற்கை எய்தினார். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய வேண்டி இந்நகரமன்றத்தின் மூலம் 2 நிமிடம் மௌனம் அனுசரிக்கப்பட்டு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் இத்தீர்மான நகலினை அன்னாரின் குடும்பத்தாற்கு அனுப்பி வைக்க தீர்மானிக்கப்பட்டது.

நகரமன்ற தலைவர்
செங்கல்பட்டு நகராட்சி